# BSNL ஊழியர சங்கம
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:72** **தேதி:-31.10.2015**

## M.S.S.ராவ் மாற்றம்-உச்ச நீதிமன்றம் அனுமதி மற்றும் சில செய்திகள்

அன்பார்ந்த தோழர்களே,

M.S.S.ராவ் பிரச்சனையில் BSNL கார்ப்பரேட் அலுவலகம் தாக்கல் செய்திருந்த SLP வழக்கு 30.10.2015 அன்று உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. M.S.S.ராவ் 'ஏற்றுக் கொண்ட பட்டியலி'ல் வைக்கப்பட்டிருந்ததால், அவரை திருவனந்தபுரத்தில் உள்ள பயிற்சி கேந்திரத்தின் (RTTC) முதல்வராக நியமிக்க BSNL நிர்வாகம் முடிவு செய்துள்ளதாக BSNLன் வழக்கறிஞர் திரு பட்வாலியா வாதிட்டார். தொழிற்சங்கங்களின் அழுத்தத்தால்தான் இந்த நியமனம் செய்யப் பட்டிருப்பதாக M.S.S.ராவ் அவர்களின் வழக்கறிஞர் வாதிட்டார். எனினும், அவரது வாதங்களை ஏற்காமல் நிர்வாகம் தாக்கல் செய்திருந்த SLPயை உச்ச நீதி மன்றம் அனுமதித்து உள்ளது. எனவே பல மாதங்களாக கேரள மாநிலத்தில் நிலவி வரும் சூழல் சரியாகி விடும் என நம்புகிறோம். இது போராடும் ஊழியர்களுக்கு கிடைத்த வெற்றி.

**கேபிள்களை அரசு நிறுவனங்கள் சீரழிப்பதை தடுக்க அமைச்சரிடம் வேண்டுகோள்:-** தரைவழி சேவை மற்றும் ப்ராட் பேண்ட் சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கு BSNL தொழிற்சங்கங்களும், நிர்வாகமும் தொடர்ச்சியான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. அதன் காரணமாக நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. எனினும், மறுபுறம், மின்சார வாரியம், பொதுப்பணித்துறை, தேசிய நெடுஞ்சாலை போன்ற அரசின் பல நிறுவனங்கள் BSNLன் OFC மற்றும் காப்பர் கேபிள்களை பெரிய அளவில் சீரழிக்கின்றனர். இதனை தடுப்பதற்கு பொருத்தமான ஏற்பாடுகளை செய்ய மத்திய தொலை தொடர்பு அமைச்சர் திரு ரவிசங்கர் பிரசாத் அவர்களுக்கு நமது மத்திய சங்கம் ஒரு கடிதம் எழுதியுள்ளது

**அழைப்புகள் துண்டிக்கப்படுவதற்கு ஜனவரி 1 முதல் நஷ்ட ஈடு தரவேண்டும்-TRAI:-** 2016 ஜனவரி 1ஆம் தேதி முதல் தொலை தொடர்பு நிறுவனங்கள் அழைப்புகள் நடுவில் துண்டிக்கப்பட்டது என்றால் நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என TRAIயின் தலைவர் திரு R.S.ஷர்மா உறுதி செய்துள்ளார். தொலை தொடர்பு நிறுவனங்கள் இதனை அமுல்படுத்த தங்களை தயார் செய்து கொள்ள வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

**சகிப்பு தன்மை இன்மைக்கு 50 வரலாற்றியலார்கள் எதிர்ப்பு:-** ரொமிலா தாப்பர், இர்ஃபான் ஹபீப், B.D.சட்டோபாத்யாயா, உபிந்தர் சிங், M.G.S. நாராயணன் மற்றும் D.N.ஜா உள்ளிட்ட நாடு முழுவதும் உள்ள 50 பிரபல வரலாற்றியலாளர்கள், நாடு முழுவதும் சகிப்புத் தன்மை இன்மையின் பல வடிவங்களில் நடைபெற்று வரும் அசாதரண சூழ்நிலைக்கு தங்களின் ஆழ்ந்த கவலையை தெரிவிக்கும் வகையில் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளனர். "சுதந்திரமாக அச்சமின்றி கருத்துக்களை தெரிவிக்கும் நல்லதொரு சூழலை உறுதி செய்ய வேண்டும். அனைத்து சமுதாயத்தினருக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டும். இந்திய நாடு கடந்த காலத்தில் கொண்டிருந்த பன்முக கலாச்சார மதிப்புகளை பாதுகாக்க வேண்டும்" என அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**